

திருவள்ளூர் மத்திய மாவட்டம் ஆவடி மாநகரம் ஆவடி கிழக்கு பகுதி தி.மு.க. சார்பில் பொதுமக்களுக்கு நீர் மோர் பந்தல் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது இதில் மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் நீர் மோர் பந்தலை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இளநீர், மோர், பழ வகைகள் பல்வேறு குளிர்பானங்கள் குடிநீர் உள்ளிட்டவை வழங்கினார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் நடு குத்தகை கே.ஜெ.ரமேஷ், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், ஆவடி மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், மற்றும் வழக்கறிஞர் வினோத் உட்பட கழக நிர்வாகிகள் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### இப்போது தேவை ;

# தமிழ்நாட்டு வளர்ச்சிக்குத் தேவையான நிலையான, நிம்மதிமிக்க ஆட்சியே!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, மே 10-

"மாற்றம் ஏற்பட்டுவிட்டது" என்று கூத்தாடினாலும் கூட, அந்த மாற்றம் நிலையான நீடிக்கும் வளர்ச்சிக்கு வழிவகுக்கக்கூடியதா? இப்போது தேவை தமிழ்நாட்டு வளர்ச்சிக்குத் தேவையான நிலையான, நிம்மதிமிக்க ஆட்சியே! என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

'திராவிட மாடல்' ஆட்சி மூலம், குறிப்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது அய்ந்தாண்டு கால ஆட்சியின்மூலம் கிடைத்துள்ள கல்வி வளர்ச்சி, தொழில் வளர்ச்சி, பொருளாதார வளர்ச்சிகளும், மதக் கலவரமற்ற அமைதிப் பூங்காவாகவே தொடரவும், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள சாதனைகளும் - மக்கள் நல வளர்ச்சிப் பணிகளும், புதிய புதிய தொழிற்சாலைகள் அமைந்ததால் பெருகிய வேலை வாய்ப்புகளும் தற்போது ஏற்பட்டுள்ள "தொங்கு சட்டமன்றம்" தீர்ப்பின்மூலம் என்னாகுமோ? என்ற அச்சம் தமிழ்நாட்டில் இன்று விவரம் அறிந்தவர்களின் மிகப்பெரிய கவலையாகும்!

**நாட்டு நலன்பற்றிய பொறுப்பாளர்களின் தெளிவான கேள்வி!**

"மாற்றம்... மாற்றம் ஏற்பட்டுவிட்டது" என்று கூத்தாடினாலும்கூட, அந்த மாற்றம் நிலைத்து நீடிக்கும் வளர்ச்சிக்கு (Sustainable Growth) வழிவகுக்கக்கூடியதா என்பது, நாட்டு நலன் பற்றிய பொறுப்பாளர்களின் தெளிவான கேள்வியாகும்!

வெற்றி பெற்றுள்ள த.வெ.க. என்ற விஜய் கட்சிக்கு இதுவரை அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை; மேலும், 118 என்ற ஆட்சி அமைக்கத் தேவைப்படும் ஆதரவு கிடைப்பதற்கே அவர்கள் தரப்பு அரும்பாடுபடுகிறது!

அரசியல் அனுபவம் இல்லாத காரணத்தால், தமிழ்நாட்டின் வரலாற்றில், இதற்கு முன் எப்போதும் நடந்திராத வகையில், பதவியேற்பு நாள் குறிப்பிட ப்பட்டு, அதுவும் முறையான வகையில் செய்யப்படாததால், ரத்து செய்யப்பட்டது.

**அனுபவமின்மையும், அரசியல் அபிலாஷைகளும்தான்!**

முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்கவிருக்கும் த.வெ.க.வின் தலைவருக்கு அளித்த பாதுகாப்பு முதல் பல விஷயங்களில் குளறுபடி என்பது எதைக் காட்டுகிறது?

அனுபவமின்மையும், அரசியல் அபிலாஷைகளும் தானே காரணம்!

ஒட்டுக் கண்ணோட்டத்தில் வெற்றி; ஆனால், நாட்டு நலக் கண்ணோட்டத்தில், முன்னுதாரணம் இல்லாத மிக மோசமான செயல்பாடுகள் அல்லவா இவை?

வெளிநாட்டிலிருந்து முதலீடு செய்து வந்தவர்களும், வரவிருக்கும் நாட்டோரும், இனி தமிழ்நாட்டில், தங்களது தொழிலைத் தொடங்க உற்சாகத்துடன் முன்வருவார்களா?

இதுபோன்று குறைந்த எண்ணிக்கை அரிது; மிகவும் கறாரான 118 கிடைத்தாலும்கூட, அது நிலையான ஆட்சியை ஏற்படுத்த உதவுமா?

பொறுப்புள்ளவர்களும், தமிழ்நாட்டின் நலனின் உண்மையான அக்கறை உள்ள வர்களும் இந்த அரசியல் தேக்க நிலையை ஏற்பார்களா? ஏற்க முடியுமா?

**குதிரை பேரம் - பொது ஒழுக்கச் சிதைவுகள் நடைபெறலாம்!**

அவையெல்லாவற்றையும் அடங்கா பதவிக்காக அரசியல் பிழைத்தோரும், கொள்கை அரசியலைத் துறந்து, தேர்தல் - பதவி வேட்டை அரசியலுக்குப் பாய்ந்து, முன்பு சொன்னதை மறந்து, 'தொழுத கையுள்ளும் படையொடுங்கும்' என்ற குறளுக்கு இலக்கியமாகி உள்ள பொல்லா நிலைக்குச் சென்றுள்ளதால், கட்சித் தாவல், 'ஆயாராம் காயாராம்' என்ற குதிரை பேரம் - பொது ஒழுக்கச் சிதைவுகள்கூட நடைபெறலாம் என்ற கவலை எழுந்துள்ளது.

இவற்றைத் தமிழ்நாடு அதிகம் கண்டதில்லை. முன்பு 1952 இல் காங்கிரஸ் எதிர்ப்பை வைத்து, 'காமன் வீல்' கட்சி என்ற தனிக் கட்சி உருவாக்கியிருந்த அன்றைய கூட்டணியிலிருந்து, திடீர் முதலமைச்சரான ஆச்சாரியார் வீசிய வலையில் வீழ்ந்து, ராஜாஜி அணிக்கு மாறிய மாணிக்கவேல் நாயக்கர் 'மக்கள் துரோகி மாணிக்கவேலர்' என்றே அர்ச்சிக்கப்பட்டு, 'சைக்கிள் பெட்டி' சரிந்த கதை - இன்று தொடரக்கூடாது!

**அணி மாறுவது சரியல்ல!**

கூட்டணி அரசியல் தேர்தலுக்கு முன்னர் ஏற்பட்டு, அதன்படி பதவி வாங்குவது தான் அறிவுச் சான்றாண்மையே தவிர, பற்றாக்குறைக்காக அணி மாறுவது சரியல்ல!

'அரசியல் பிழைத்தோருக்கு அறங்கூற்றம்' என்பது அறிவுரையானாலும், அதை மறந்து நடப்பது காலந்தோறும் தொடர்கிறது. இப்போது தேவை தமிழ்நாட்டு வளர்ச்சிக்குத் தேவையான நிலையான, நிம்மதிமிக்க ஆட்சியே! நாம் பயணித்து வந்ததில் முறிவு கூடாத ஒன்று! நம்பகத்தன்மையும் முக்கியமானது!

இந்த நேரத்தில், இதைச் சொல்லவேண்டியதும், சுட்டிக்காட்ட வேண்டியதும் எங்களுடைய கடமை!

காத்திருந்து பார்ப்போம், கவனச்சிதறல் இன்றி!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

### 'விடுதலை' தன் பணியை தொய்வின்றித் தொடர

# 'பெரியார் உலகத்திற்கு' ரூ.50 ஆயிரம் நன்கொடை!

## பேராசிரியர் ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி. தன் முதல்மாத ஊதியத்திலிருந்து வழங்கினார்!



சென்னை, மே 10-

பேராசிரியர் ஜெ.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் (தி.மு.க.) மாநிலங்களவை உறுப்பினராகப் பதவி ஏற்றபின் கிடைத்த முதல் மாத ஊதியத்திலிருந்து 'பெரியார் உலகத்திற்கு' ரூ.50,000 நன்கொடையைத் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களிடம் பொன்னாடை அணிவித்து வழங்கி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

**விடுதலை வளர்ச்சிக்கு உரமிடுங்கள்..**

அன்பார்ந்த தோழர்களே, தந்தை பெரியார் அவர்களால் தொடங்கப்பட்டு, திராவிட இயக்கத்தின் முதன்மைக் குரலாக, உலகின் முதல் மற்றும் பகுத்தறிவு நாளேடாக திகழ்ந்து வருகிறது "விடுதலை" நாளேடு.

"விடுதலை" என்பது ஒரு நாளேடு மட்டுமல்ல; இது ஒரு இயக்கம். விடுதலை தன் பணியைத் தொய்வு இன்றித் தொடர, உங்கள் பொருளாதார பங்களிப்பு மிகத் தேவை. பெரியார் தொடங்கி வளர்த்த விடுதலையை உரமிட்டு இன்னும் வளர்க்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. உங்கள் நன்கொடை அந்த வளர்ச்சிக்கு உதவும்.

தொகை எவ்வளவு என்பது முக்கியமல்ல! உங்கள் பங்களிப்பே முக்கியம்! நீங்கள் தரும் ஒவ்வொரு ரூபாயும் சமூகநீதிச் சுடரை ஒளிர வைக்கும். நன்றி!



முரசொலி சுற்றுப்பயண ஆய்வாளர் க.தட்சிணாமூர்த்தி, த.சியாமளா தேவி ஆகியோரின் இல்லத்தினை முன்னாள் அமைச்சர் – திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைத்து வாழ்த்தினார். உடன் தேர்தல் பணிக்குழு செயலாளர் பெ.மணிமாறன், காளவாக்கம் மூ.தேவராஜ், பாலவாக்கம் த.விஸ்வநாதன், சித்தாலப்பாக்கம் எஸ்.ரவி, தி.க.பாளையம், வட்டச் செயலாளர்கள் த.பார்த்திபன், பொ.த.மதிவாணன், க.செந்தில்குமார், க.ஜெயகாந்தன், எஸ்.பிரசன்ன குமார், எஸ்.மனிஷ் கண்ணன், ஜெ.விஷாலினி, ஜெ.விகாஷினி, எஸ்.ஈஸ்வரி, ஜெ.டயானா, கோ.திருகுமரன், ம.தியாகராஜன், த.கமலேஷ், த.அஸ்வின் மற்றும் கழகத் தோழர்களும் முன்னோடிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





காஞ்சிபுரம் மாநகராட்சியில் மக்கள் தாகம் தீர்க்க தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார் ஏற்பாட்டில் நீர் மோர் பந்தலை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் திறந்து வைத்தார். உடன் மாநகர செயலாளர் சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாவட்ட பொருளாளர் சன் பிராண்ட் ஆறுமுகம், வி.எஸ்.ராமகிருஷ்ணன், திருமதி. நித்யா சுகுமார் உள்ளிட்ட பகுதிகழக செயலாளர்கள், மாநகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### + 2 பொதுத்தேர்வு முடிவுகள்!

# தமிழ்நாட்டில் சென்ற ஆண்டை விட மாணவ - மாணவிகள் தேர்ச்சி அதிகம்!

## 7,53,694 பேர் தேர்ச்சி! ஈரோடு மாவட்டம் முதலிடம்!

சென்னை, மே 10-

தமிழ்நாட்டில் +2 பொதுத்தேர்வில் 95 புள்ளி 20 சதவீதம் பேர் தேர்ச்சியடைந்துள்ளனர். மாணவர்களை காட்டிலும் மாணவிகள் அதிக அளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ப்ளஸ் டூ பொதுத் தேர்வினை, தமிழ்நாடு முழுவதும் 4 லட்சத்து 18 ஆயிரத்து 724 மாணவியர்களும், 3 லட்சத்து 72 ஆயிரத்து 930 மாணவர்களும் என மொத்தமாக 7 லட்சத்து 91 ஆயிரத்து 654 பேர் எழுதி இருந்தனர். இந்த நிலையில் ப்ளஸ் டூ பொதுத்தேர்வு முடிவுகளை பள்ளிக்கல்வித்துறை நேற்று வெளியிட்டது.

**மாணவிகளே அதிகம் தேர்ச்சி!**

அதில், தேர்வு எழுதியவர்களில் 7 லட்சத்து 53 ஆயிரத்து 694 பேர் தேர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தேர்ச்சி விகிதம் 95 புள்ளி பூஜ்ஜியம் மூன்றாக இருந்த நிலையில், நடப்பாண்டு தேர்ச்சி விகிதம் பூஜ்ஜியம் புள்ளி ஒன்று ஏழு சதவீதம் அதிகரித்து 95 புள்ளி இரண்டு பூஜ்ஜியமாக உள்ளது. வழக்கம்போல், இந்த ஆண்டும் மாணவர்களை விட மாணவிகளே அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவியர் 4 லட்சத்து 6 ஆயிரத்து 167 பேர் தேர்ச்சி பெற்ற நிலையில், 3 லட்சத்து 47 ஆயிரத்து 527 மாணவர்களே தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவர்களை விட 3.8 சதவீத மாணவியர் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

**மே 13 முதல் தற்காலிக மதிப்பெண் சான்றிதழ்!**

தற்காலிக மதிப்பெண் சான்றிதழை மாணவ, மாணவிகள் வரும் 13ம் தேதி முதல் பெற்றுக் கொள்ளலாம் என பள்ளி கல்வித் துறை தெரிவித்துள்ளது. மேலும் விடைத்தாள் நகல்களைப் பெற வரும் 12ம் தேதி முதல் 16ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ப்ளஸ் டூ துணைத் தேர்வு வரும் ஜூன் 29ம் தேதி முதல் ஜூலை 7ம் தேதி வரை நடைபெறும் என்றும், 11ம் வகுப்பிற்கான துணைத் தேர்வு ஜூலை 8ம் தேதி முதல் 16ம் தேதி வரை நடைபெறும் என்றும் குறிப்பிட்டுள்ள பள்ளிக்கல்வித் துறை, துணைத் தேர்வினை எழுத விரும்புவோர் வரும் 18ம் தேதி முதல் ஜூன் 2ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துள்ளது.

மேலும், மறுகூட்டலுக்கு ஜூன் 5ம் தேதி முதல் 8ம் தேதி வரை மாணவ, மாணவிகள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஈரோடு மாவட்டம் முதலிடம்!**

பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிக தேர்ச்சிப் பெற்ற அரசுப் பள்ளிகளில், ஈரோடு மாவட்டம் தமிழ்நாட்டில் முதலிடம் பிடித்துள்ளது.

+ 2 பொதுத்தேர்வில் அதிக தேர்ச்சிப் பெற்ற அரசுப் பள்ளிகளில் ஈரோடு, சிவகங்கை, திருச்சி, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் மாநில அளவில் முதல் ஐந்து இடங்களை பிடித்துள்ளன. பிளஸ் 2 பொதுத்தேர்வில் அரசுப் பள்ளிகளின் தேர்ச்சி விகிதத்தில் 98.24 சதவீதத்துடன் ஈரோடு மாவட்டம் தமிழ்நாட்டில் முதலிடத்தை பிடித்துள்ளது.

சிவகங்கை மாவட்டம் 96.97 சதவீத தேர்ச்சியுடன் இரண்டாமிடத்தையும், திருச்சி மாவட்டம் 96.55 சதவீத தேர்ச்சியுடன் மூன்றாமிடத்தையும் பிடித்துள்ளன. தென்காசி மாவட்டம் 96.15 சதவீத தேர்ச்சியுடன் நான்காமிடத்தையும் கன்னியாகுமரி மாவட்டம் 96.12 சதவீத தேர்ச்சியுடன் ஐந்தாமிடத்தையும் பிடித்துள்ளன.

**கணினி அறிவியல் பாடத்தில் 7 ஆயிரம் பேர் 100-க்கு 100!**

பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிகபட்சமாக கணினி அறிவியல் பாடத்தில் சுமார் 7 ஆயிரம் மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

பிளஸ் 2 பொதுத்தேர்வில் அதிகபட்சமாக கணினி அறிவியல் பாடத்தில் 6 ஆயிரத்து 945 மாணவர்களும் குறைந்தபட்சமாக விலங்கியல் பாடத்தில் 18 மாணவர்களும் 100க்கு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர். தமிழ்ப் பாடத்தில் 83 பேரும் ஆங்கிலத்தில் 21 பேரும், இயற்பியல் பாடத்தில் 105 பேரும், வேதியியல் பாடத்தில் 632 பேரும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர். உயிரியல் பாடத்தில் 784 பேரும் கணிதப் பாடத்தில் 732 பேரும் தாவரவியலில் 31 பேரும் 100க்கு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

வணிகவியலில் 683 பேரும் கணக்குப் பதிவியலில் 1,946 பேரும் பொருளியலில் 440 பேரும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

வரலாறு பாடத்தில் 282 பேரும் கணினிப் பயன்பாடுகள் பாடத்தில் 2 ஆயிரத்து 99 பேரும் வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் பாடத்தில் 463 பேரும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

இவற்றில் ஏதேனும் ஒரு பாடத்தில் மட்டும் 16 ஆயிரத்து 24 மாணவர்கள் 100க்கு 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

அதேபோல், அரசுப் பள்ளி மாணவர்களில் ஆயிரத்து 695 பேர் ஏதேனும் ஒரு பாடத்தில் மட்டும் 100 மதிப்பெண்களை பெற்றுள்ளனர்.

**பாடவாரியாக மதிப்பெண் சதவீதம்!**

ப்ளஸ் டூ பொதுத் தேர்வில், மாணவ, மாணவிகள் பாடவாரியாக பெற்ற மதிப்பெண்களின் சதவீதத்தை பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ளது.

பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ள தேர்வு முடிவுகளில், முதன்மைப் பாடங்களான இயற்பியல் பிரிவில் 98 புள்ளி எட்டு ஏழு சதவீதத்தினரும், வேதியியல் பிரிவில் 98 புள்ளி எட்டு இரண்டு சதவீத மாணவ, மாணவிகள் தேர்ச்சி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், உயிரியல் மற்றும் கணிதம் பாடத்தில் தலா சுமார் 99 சதவீதம் பேர் தேர்ச்சி அடைந்துள்ளனர். தாவரவியல், விலங்கியல் மற்றும் கணக்குப் பதிவியலில் சுமார் தலா 98 சதவீதத்தினரும், கணினி அறிவியலில் 99 புள்ளி எட்டு நான்கு சதவீதத்தினரும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

இதேபோல் வணிகவியல் மற்றும் வரலாறு பாடத்தில் சுமார் தலா 97 சதவீதம் பேர் தேர்ச்சி அடைந்துள்ளதாக பள்ளிக்கல்வித்துறை தெரிவித்துள்ளது. GFX 2 பாடப்பிரிவுகள் வாரியான தேர்ச்சி விகிதத்தில், அறிவியலில் 96 புள்ளி ஒன்பது பூஜ்ஜியம் சதவீதத்தினரும், வணிகவியலில் 92 புள்ளி ஆறு ஏழு சதவீதம் பேரும், கலைப் பிரிவில் 85 புள்ளி ஒன்று ஒன்பது சதவீதம் பேரும், தொழிற்பாடத்தில் 85 புள்ளி ஒன்பது ஏழு சதவீதம் பேரும் தேர்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருவள்ளூர் சட்டமன்ற தொகுதியில் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களித்த பொதுமக்களுக்கு திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் கிழக்கு ஒன்றிய போளிவாக்கம் ஊராட்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் நன்றி தெரிவித்தார். உடன் மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் ஆர்.டி.இ. ஆதிசேஷன், ஒன்றிய செயலாளர்கள் க.அரிகிருஷ்ணன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், பிரகாஷ்ஞானஒளி, நிர்வாகிகள் வழக்கறிஞர் பி.கே.நாகராஜ், முன்னாள் நகர மன்ற தலைவர் பொன்.பாண்டியன் உள்பட பலர் உள்ளனர்.